டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.01.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 182 - Madurai | Online Edition

# பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அந்தமானில் நவீன மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுகத்திற்கு ஒப்புதல்

புது தில்லி, ஜன.28

பிரதமரின் மீன்வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 100 சதவீத மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூ.199.24 கோடி செலவில், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவில் உள்ள மாயா பந்தரில் நவீன மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுகம் மேம்பாட்டிற்காக யூனியன் பிரதேச நிர்வாகத்தின் முன் மொழிவுக்கு மத்திய மீன்வளத்துறை ஒப்புதல் அளித்துள்ளது.

நவீன தொழில்நுட்பத்துறை ஆதரவுடன் மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக கரைக்குக் கொண்டுவருவது, மீன்களை சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு வைப்பது போன்ற வசதிகள் நவீன மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுகத்தில் ஏற்படுத்தப்படும்.

இது வேலைவாய்ப்பை உருவாக்கி இத்தொழிலில் தொடர்புடையவர்களது வருவாயை அதிகரித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்றும் சட்டவிரோத செயல்களுக்குத் தீர்வு காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நவீன மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுக மேம்பாடு 430 மீன்பிடி படகுகள் கரை சேரவும், மீன்களை இருப்பு வைக்கவும் ஆண்டுக்கு 9,900 டன் மீன்களை கரைக்குக் கொண்டு வரவும் உதவும்.



# தென்னை விவசாயிகளுக்கு காண்டாமிருக வண்டு கட்டுப்பாட்டுப் பயிற்சி



மதுரை, ஜன.28

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் பகுதியில் உள்ள தென்னை விவசாயிகளுக்காக காண்டாமிருக வண்டு (Rhinoceros Beetle) தாக்குதலை கட்டுப்படுத்தும் நோக்கில் வாளி வலை (Bucket Trap) முறையினைப் பயன்படுத்தி செயல்விளக்கப் பயிற்சி, மதுரை வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் மாணவி க.அகல்யா என்பவரால் நடத்தப்பட்டது. தென்னைப் பயிர்களில் காண்டாமிருக வண்டு ஏற்படுத்தும் சேதங்கள், அதன் வாழ்க்கைச் சுழற்சி மற்றும் அதனை கட்டுப்படுத்த சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பான முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

அதில் குறிப்பாக பெரோமோன் அடிப்படையிலான வாளி வலை தயாரிப்பு முறை, அதை வயலில் அமைக்கும் இடம், பராமரிப்பு மற்றும் பயன்கள் குறித்து நேரடி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த முறையைப் பயன்படுத்துவதன் மூலம் ரசாயன மருந்துகளை குறைத்து, குறைந்த செலவில் பயிர் பாதுகாப்பை மேற்கொள்ளலாம் என விளக்கப்பட்டது.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகள், இந்த நடைமுறை எளிமையானதும் பயனுள்ளது மானதாக இருப்பதாக தெரிவித்து, எதிர்காலத்தில் தங்கள் தோட்டங்களில் இதனை பின்பற்ற உள்ளதாக தெரிவித்தனர். இவ்வகை பயிற்சிகள் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருப்பதால், இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# எரியோஃபைட் மைட் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, ஜன.28

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவி இந்துமதி சி.சே, தனது ஊரக வேளாண் அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பொட்டல்கலம் கிராமத்தில் 18.1.25 அன்று தேங்காய் எரியோஃபிட் மைட் மேலாண்மை குறித்து ஒரு பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினார். இந்த பயிற்சி நிகழ்ச்சியின் போது, எரியோஃபிட் மைட் தாக்கத்தால் இளம் தேங்காய்களில் முக்கோண வடிவ மஞ்சள் நிறமாதல் மற்றும் தேங்காயில் நீளவாக்கில் பிளவுபடுதல் போன்ற சேத அறிகுறிகள் ஏற்படுகின்றன என்பதை அவர் விளக்கினார்.

மேலும், எரியோஃபிட் மைட்டை கட்டுப்படுத்துவதற்கான வேர் ஊட்டம் (Root feeding) முறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அதோடு, தேங்காய் தோட்டத்தில் சணப்பு (Sun-hemp) பயிரை இடைபயிராக வளர்ப்பதன் மூலம் மைட் தாக்கத்தை குறைக்கலாம்

என்பதையும், தேங்காய் தோட்டத்தைச் சுற்றி காசுவரினா மரங்களை எல்லைப்பயிராக வளர்ப்பதன் மூலம் காற்றின் மூலம் எரியோஃபிட் மைட் வயலுக்குள் நுழைவதைத் தடுக்கலாம் என்பதையும் அவர் விளக்கினார்.

இந்த பயிற்சி நிகழ்ச்சி மூலம், விவசாயிகள் தேங்காய் எரியோஃபிட் மைட் தாக்கத்தின் அறிகுறிகளை சரியான நேரத்தில் அடையாளம் கண்டு, பொருத்தமான மேலாண்மை முறைகளைப் பின்பற்றி சேதத்தை குறைக்க முடியும் என்ற விழிப்புணர்வை மாணவி ஏற்படுத்தினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483**

# வாழை சாகுபடி தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்



திண்டுக்கல், ஜன.28

திண்டுக்கல் மாவட்டம், ஸ்ரீராமபுரம் பகுதியில், மதுரை வேளாண் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர் டி.எஸ். சிவா, விவசாயிகளுக்கான வாழை சாகுபடி தொழில்நுட்பக் குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினார். உதவி வேளாண்மை அலுவலர் (AAO) பூபதி, வழிகாட்டுதலின் கீழ் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வாழையில் நிலப்போர்வை (Mulching) அமைப்பதன் அவசியம் குறித்து மாணவர் சிவா விளக்கமளித்தார். உலர்ந்த இலைகளைக் கொண்டு மண்ணை மூடுவதன் மூலம் நிலத்தடி ஈரப்பதத்தை எவ்வாறு தக்கவைப்பது மற்றும் தேவையற்ற களைகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது குறித்து விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும், வாழை குலை தள்ளும் பருவத்தில் பலத்த காற்றினால் மரங்கள் முறிந்து விழுவதைத் தடுக்க, மூங்கில் அல்லது யூகலிப்டஸ் மரக்கட்டைகளைப் பயன்படுத்தி முட்டுக் கொடுத்தல் முறை குறித்து நேரடிச் செயல்விளக்கம் அளிக்கப் பட்டது. இத்தகைய நவீன மேலாண்மை முறைகளைக் கையாளு வதன் மூலம், சாகுபடி செலவைக் குறைத்து கூடுதல் லாபம் பெற முடியும் என அவர் எடுத்துரைத்தார். இந்தத் தொழில்நுட்பப் பயிற்சி ஸ்ரீராமபுரம் பகுதி விவசாயிகளிடையே மிகுந்த பயனுள்ளதாக இருந்தது.



**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
*+91 80563 05483*
*+91 9344811812*

# நன்றி

# ஹைட்ரோபோனிக்ஸ் (Hydroponics) - மண் இல்லா விவசாயம் – ஒரு பார்வை

இன்றைய காலகட்டத்தில் விவசாயம் பல மாற்றங்களை சந்தித்து வருகிறது. நிலம் பற்றாக்குறை, நீர் தட்டுப்பாடு, காலநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வாக உருவாகிய ஒரு நவீன விவசாய முறையே ஹைட்ரோபோனிக்ஸ் (Hydroponics) ஆகும். மண் பயன்படுத்தாமல், நீரில் கரைந்துள்ள ஊட்டச்சத்துகளின் மூலம் தாவரங்களை வளர்க்கும் முறையே ஹைட்ரோபோனிக்ஸ்.

**ஹைட்ரோபோனிக்ஸ் என்றால் என்ன?**

Hydro (நீர்) + Ponics (வேலை செய்யுதல்) என்ற கிரேக்கம் வார்த்தைகளிலிருந்து உருவான சொல் தான் Hydroponics. இந்த முறையில், தாவரங்களின் வேர் பகுதி நேரடியாக ஊட்டச்சத்து கலந்த நீரில் வைக்கப்படுகிறது. மண் இல்லாததால் தாவரங்களுக்கு தேவையான அனைத்து சத்துகளும் சரியான அளவில் வழங்கப்படுகிறது.

**ஹைட்ரோபோனிக்ஸ் செயல்முறை**

**இந்த முறையில் தாவரங்கள் வளர :**

தண்ணீர், தேவையான ஊட்டச்சத்துகள் (நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்றவை)

ஆக்சிஜன், ஒளி, இவை முக்கியமாக தேவை. தாவரத்தின் வேர் பகுதி நியூட்ரியண்ட் சால்யூன் எனப்படும் ஊட்டச்சத்து கலந்த நீரில் மூழ்கியிருக்கும். சில முறைகளில் தண்ணீர் தொடர்ந்து சுழற்சி செய்யப்படும்.

**ஹைட்ரோபோனிக்ஸ் வகைகள்**

**NFT (Nutrient Film Technique)**
ஊட்டச்சத்து கலந்த நீர் மெல்ல தாவர வேர் வழியாக ஓடும் முறை.

**DWC (Deep Water Culture)**
தாவர வேர் முழுவதும் நீரில் மூழ்கி இருக்கும் முறை.

**Drip System**
துளி துளியாக ஊட்டச்சத்து நீர் வழங்கப்படும் முறை.

**Wick System**
துணி அல்லது கயிறு மூலம் நீர் வேர் பகுதிக்கு செல்லும் எளிய முறை.

**ஹைட்ரோபோனிக்ஸ் விவசாயத்தின் நன்மைகள்**

மண் தேவையில்லை, நீர் பயன்பாடு குறைவு (90% வரை சேமிப்பு), குறைந்த இடத்தில் அதிக உற்பத்தி, மண் மூலம் வரும் நோய்கள் இல்லை, குறைந்த காலத்தில் பயிர் வளர்ச்சி, நகரப்பகுதிகளிலும் விவசாயம் செய்ய முடியும்.

**ஹைட்ரோபோனிக்ஸ் குறைபாடுகள்**

ஆரம்ப செலவு அதிகம், தொழில்நுட்ப அறிவு தேவை, மின் சார்பு அதிகம், பராமரிப்பு கவனம் தேவை.



### ஹைட்ரோபோனிக்ஸ் மூலம் வளர்க்கப்படும் பயிர்கள்

லெட்டூஸ், கீரை வகைகள், தக்காளி, வெள்ளரிக்காய், மிளகாய், ஸ்ட்ராபெரி.

### இந்தியாவில் ஹைட்ரோபோனிக்ஸ் முக்கியத்துவம்

இந்தியாவில் நிலமும் நீரும் குறைந்து வரும் நிலையில், ஹைட்ரோபோனிக்ஸ் ஒரு சிறந்த மாற்று விவசாய முறையாக பார்க்கப்படுகிறது.

நகரங்களில் கூரை விவசாயம் (Terrace Farming) மற்றும் Indoor Farming ஆகியவற்றில் இந்த முறை மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

மேலும் விவரங்களுக்கு அ.அபிதாரணி, இறுதியாண்டு வேளாண் மாணவி மற்றும் முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், குழு ஒருங்கிணைப்பாளர், S.சந்தியா, A.L.நிவேதா, உதவிப்பேராசிரியர்கள் மற்றும் குழு ஒருங்கிணைப் பாளர்கள், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

## ஊரக பங்கேற்பு மதிப்பீடு செய்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.28

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை தொகுதி கார்கூடல்ப்பட்டி கிராமத்தில் ஊரக பங்கேற்பு மதிப்பீடு நுட்பங்கள் கிராம நிலவரை படம், சமூக வரைபடம், மக்கள் தொகை கணக்கீடு, வெண் படம், தினசரி செயல்பாடுகள், நீர் வளங்கள் வரைபடம், பயிர் அட்டவணை, பருவகால அட்டவணை மற்றும் பிரச்சினை மரம் போன்றவற்றை வேளாண் விவசாயிகளுடன் சேர்ந்து மாணவிகள் வரைந்தனர். மேலும் மாணவிகள் இதை பற்றி விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கினார்.

# இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு பேரணி நடத்தி வேளாண் கல்லூரி மாணவிகள்

திருவள்ளூர், ஜன.28

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி பகுதியில் யூபுநிசி திட்டத்தின் ஒரு பகுதியாக இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.

இந்த பேரணியில் மாணவிகள் இயற்கை விவசாயம் – நமது ஆரோக்கியத்தின் அடித்தளம், ரசாயனங்களை தவிர்ப்போம்





நிலத்தையும் மனிதனையும் காப்போம், மண் வளம் காக்க இயற்கை விவசாயம், போன்ற முழக்கங்களை எழுப்பி பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.


மேலும், ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் தீமைகள், இயற்கை உரங்கள், உயிர் பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு, மண் வள பாதுகாப்பு, சுற்றுச்சூழல் சமநிலை போன்ற விசயங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு பேரணியின் மூலம் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதுடன், நிலையான வேளாண்மை முறைகள் குறித்து கிராம மக்களிடம் நல்ல புரிதலை ஏற்படுத்துவது முக்கிய நோக்கமாக இருந்தது. RAWE திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த செயல்பாடு மாணவிகளுக்கு கிராமப்புற வேளாண்மை அனுபவத்தையும், சமூகப் பங்களிப்பையும் வழங்கியதுடன், விவசாயிகளிடையே இயற்கை விவசாயத்தின் அவசியத்தை உணர்த்தும் வகையில் அமைந்தது.

# ஜடாம் கரைசல் பற்றி செய்முறை விளக்கம் அளித்த வேளாண் அறிவியல் மாணவர்கள்



திருச்சி, ஜன.28

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் ஜடாம் கரைசல் செய்முறை மற்றும் அதன் நன்மைகள் குறித்து செயல் முறை விளக்கம் அளித்தனர். இந்த ஜடாம் கரசலை உபயோகிப்பது மூலம் மண்ணின் வளத்தை மேம்படுத்தலாம். மேலும் ஆரோக்கியமான பயிர் விளைச்சலை ஊக்குவிக்கிறது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தேனீக்கள் இல்லா உலகம் நினைத்து பார்க்க முடியுமா?

## எச்சரிக்கை தகவல்!!



தேனீக்கள் பூமியை விட்டு அழிந்து போனால் மனித இனம் வெறும் 4 ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழும் என அறிவிய லாளர்கள் அதிர்ச்சி தகவலை கூறுகின்றனர். தேனீக்களின் வியக்கத்தக்க உழைப்பு, அவை மறைந்தால் ஏற்படும் உணவுப்பஞ்சம் மற்றும் சுற்று சூழல் பாதிப்புகள் குறித்து அதிர வைக்கும் தகவல்களை பற்றி பார்ப்போம்.

**தேனீக்களின் சிறப்பு**

ஒரு முறை தேன் சேகரிக்க தொடங்கி விட்டால் அவை இறக்கும் வரை அந்த வேலையை செய்து கொண்டே இருக்கும். சொல்லப்போனால் பல தேனீக்கள் அதிகப்படியான உழைப்பால் சிறகுகள் தேய்ந்து போய் பறக்க முடியாமலே தான் உயிரிழக்கின்றன. ஒரு தேனீக்களின் சிறகுகள் தேய்ந்து போனால் அவையால் பறக்க முடியாமல் தான் உயிரிழக் கின்றன. தேனீ தன் வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் அது சேகரிக்கும் தேனீன் அளவு வெறும் அரை தேக்கரண்டி (TEA-SPOONS) மட்டும்.

அதாவது நாம் சாப்பிடும் ஒரு ஸ்பூன் தேன் உருவாவதற்கு சுமார் 12 தேனீக்களின் உழைப்பு ஆகும். தேனீக்கள் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் உழைக்க வேண்டியதாக இருக்கும். சுறுசுறுப்புக்கு எடுத்துக்காட்டாக தேனீக்கள் உள்ளது என்றால் மிகையல்ல.

**அப்படிப்பட்ட தேனீக்கள் இல்லாத உலகம் எப்படி இருக்கும்???**

கீழ்க்கண்ட விபரீதங்கள் ஏற்படும். அவை என்னென்ன.

**1) உணவுப் பஞ்சம் (FOOD CRISIS)**

தேனீக்கள் வெறும் தேனை மட்டும் கொடுப்பதில்லை. அவை உலகின் மிகச்சிறந்த மகரந்த சேர்க்கையாளர்கள் (POLLINATORS). நாம் உண்ணும் உணவில் 3ல் ஒரு பங்கு தேனீக்களின் மகரந்த சேர்க்கையால் தான் கிடைக்கிறது. எடுத்துக்காட்டாக ஆப்பிள், பாதாம், தக்காளி, வெங்காயம், திராட்சை போன்ற முக்கிய பயிர்கள் தேனீக்கள் இல்லாமல் காய்க்காது. தேனீக்கள் அழிந்தால் அந்த பயிர்களின் உற்பத்தி நின்று போகும்.

**2) பல்லுயிர் சமநிலை சீர்குலையும் (ECOLOGICAL COLLAPSE)**

தேனீக்கள் இல்லை என்றால் பல காட்டு பூக்கள் மற்றும் செடிகள் இனப்பெருக்கம் செய்ய முடியாது. அந்த செடிகளை சார்ந்து வாழும் பூச்சிகள், பறவைகள் மற்றும் சிறு விலங்குகள் உணவின்றி அழியும். இது ஒரு சங்கிலித் தொடர் (FOOD CHAIN) வினையாக மாறி காடுகளின் பரப்பளவு குறைத்து பூமியின் வெப்ப நிலையை அதிகரிக்கும், நீடித்த வறட்சியும் ஒழுங்கற்ற மழை பொழிவு உண்டாகும், தேனீக்கள் இல்லாத உலகில்.

**3) பருத்தி மற்றும் ஆடைத் தட்டுபாடு**

நம்முடைய உடைகளை தயாரிக்க பயன்படும் பருத்தி (COTTON) விளைச்சலுக்கு தேனீக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தேனீக்கள் மறைந்தால் பருத்தி உற்பத்தி குறைந்து துணி மற்றும் ஆடைத் தொழிற்சாலைகள் குறையும்.

**4) பால் மற்றும் இறைச்சி உற்பத்தி பாதிப்பு**

கால்நடைகளுக்கு உணவாக பயன்படும் ஆல்ப ஆல்பா (ALFALFA) போன்ற புற்கள் மற்றும் தானியங்கள் விளைவதற்கு தேனீக்கள் அவசியம். இவை இல்லை யென்றால் கால்நடைகளின் தீவனம் கிடைக்காது. இதனால் பால் மற்றும் இறைச்சி உற்பத்தியும் பாதிக்கப்படும்.

தேனீக்கள் தற்போது பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் கால நிலை மாற்றத்தால் வேகமாக அழிந்து வருகின்றன. அவற்றை பாதுகாக்க வயல்களின் வரப்பு ஓரங்கள் வீடுகளின் வேலி ஓரங்கள் போன்ற இடங்களில் பூக்களை பயிரிடுவோம். பூச்சிக் கொல்லி மருந்தை பயன்படுத்தவதை குறைப்போம். இயற்கை வழி விவசாயத்தை நாடுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விவசாயிகளை தேடி விவசாய கல்லூரி மாணவிகள் செயல்முறை விளக்கம்

திருச்சி, ஜன.28

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், கல்பாளயத்தான்பட்டி கிராமத்தில் மதர் தெரேசா வேளாண்மை கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகள் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தில் அமிர்த கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து செயல்முறை விளக்கத்தை மாணவிகள் விவசாயிகளுக்கு வழங்கினர். இதில் கிராம பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு விவசாயி களிடம் செயற்கை விவசாயத்தின் தீமையை எடுத்துரைத்து பின்னர் இயற்கை விவசாயத்தின் நன்மைகளை பற்றி விளக்கி, மேலும் அதில் ஒன்றான உயிர் உரமான அமிர்தகரைசலில் மாட்டுச்சான, மாட்டு கோமியம், நாட்டு சர்க்கரை மற்றும் தண்ணீர் இவற்றை மட்டும் பயன்படுத்தி எவ்வாறு தயாரிக்க வேண்டும். பயிர்களுக்கு எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்றும் விவசாயிகள் முன்னி லையில் செய்து காட்டினார்கள். இதன் மூலமாக செயற்கை விவசா யத்தை விட இயற்கை விவசாயத்தில் பணம் மிக குறைவாகதான் இருக்கும் என்றும் பயிர் வளர்ச்சியை மேம்படுத்தும், நோய் மற்றும் பூச்சி தாக்குதல்களை கட்டுப்படுத்தும், மண் வளத்தை அதிகரிக்கும் என்றும், இயற்கை விவசாயத்தை பற்றிய விழிப்புணர்வை விவசாயி களுக்கு ஏற்படுத்தினர்.

# கரையான் தாக்கத்தை கட்டுப்படுத்தும் முறை குறித்த விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



தேனி, ஜன.28

தேனி மாவட்டம், கூடலூர் கிராமத்தில், மதுரை வேளாண் கல்லூரி மாணவி, தென்னை மரங்களில் ஏற்படும் கரையான் தாக்கத்தை கட்டுப்படுத்தும் செய்முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். இந்த விளக்கத்தில், சுண்ணாம்பு, வேப்பெண்ணெய் மற்றும் குளோர்பைரிபாஸ் (பிற பூச்சிகளுக்கும் எதிராக செயல்படும்) பயன்படுத்தி பெயின்ட் போன்று கலவை தயார் செய்யவும். தென்னை மரத்தின் தண்டு பகுதியில் இம்மருந்துக் கலவையை துணி அல்லது தூரிகை கொண்டு தடவும் முறையால் கரையான் தாக்கத்தை குறைக்கலாம் என்றார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விருதுநகர் பயிர் உற்பத்தியாளர் கம்பெனியின் மிளகாய் சாகுபடிக்கான ஆர்கானிக் சான்றிதழ் பெறுவதற்கான ஆலோசனை



விருதுநகர், ஜன.28

விருதுநகர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பில் 200 ஏக்கர் சம்பா மிளகாய் சாகுபடிக்கான ஆர்கானிக் சான்றிதழ் பெறுவதற்காக விருதுநகர் மாவட்ட விதை சான்றளிப்பு மற்றும் உயிர்ம சான்றளிப்பு உதவி இயக்குநர். கோகிலா, உயிர்ம சான்றளிப்பு வேளாண் அலுவலர் விக்னேஷ் ஆகியோரை சந்தித்தனர்.

அப்போது அவர்கள் கூறுகையில், பங்களிப்பு உத்தரவாத திட்டம் (PGS INDIA) உள்நாட்டு பரிவர்த்தனை செய்வதற்காக உயிர்ம சான்று பெற (ORGANIC CERTIFICATION) NPOP STANDARD UNDER APEDA) மாற்றாக உருவாக்கபட்டது இந்த (PGS INDIA) என்றனர். மேலும் இதனுடைய சிறப்புகளை கூறுகையில், உள்ளூர் குழுவிற்கான நெறி முறைகள் (LOGAL GROUP)

1) ஒரு குழுவில் விவசாயிகளின் எண்ணிக்கை குறைந்தபட்சமாக 5 நபர்கள் முதல் அதிகபட்சமாக 100 நபர்கள் வரை இருக்கலாம். ஆனால் 25 நபர்கள் என்பது விரும்பத்தக்கது (PERFERED) இவர்கள் ஒரே கிராமத்தை சார்ந்தவர்களாவோ அருகேயுள்ள கிராமத்தை சார்ந்தவர்களாவோ இருக்கலாம்.

பெண் உயிர்ம விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதிகமாக பரப்பளவு கொண்ட ஒரு விவசாயி, குழுவில் உள்ள மொத்த விவசாயிகளின் பரப்பளவில் 50% மேல் இருக்க கூடாது. முக்கியமாக PGS INDIA சான்று பெற பதிவு கட்டணம் (REGISTRATION FEES) கிடையாது என்றனர். மேலும் விதை சான்று அலுவலர் விக்னேஷ் கூறுகையில் நம்முடைய மாவட்டத்தில் இந்த முறை அதிகமாக பின்பற்றப்பட்டு வருவதாகவும் உள்ளூர் குழுக்களுக்குள் வயலாய்வு செய்து (FILED INSPECTION) ஒவ்வொரு பருவத்திற்கும் வாய்ப்பு சான்றிதழ் வழங்குவதாக தெரிவித்தார். இதில் விவசாயிகளே நம்பிக்கையுடன் தொலைநோக்கு பார்வையுடன் பங்கேற்பு செய்வதால் வெளிப்படையாக இருக்கிறது என்றார். அவ்வப்போது பிராந்திய கவுன்சில் வழிகாட்டுதலின் பேரில் PGS INDIA திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக எங்களுடைய

துறை (தமிழ்நாடு உயிர்ம சான்றளிப்பு துறை செயல்படுவதாக கூறினார்.

இந்த நிகழ்வில் FPO செயல் அலுவலர்கள் பார்த்த சாரதி, சுந்தர மகாலிங்கம், அருண் மற்றும் அக்ரி அட்வைசர் சந்திர சேகரன் உட்பட கலந்து கொண்டனர். மிளகாய் சாகுபடியாளர் இந்த சான்று பெறுவதால் நடைமுறை விலையை விட கூடுதலான விலைக்கு தங்களுடைய விளைபொருட்களை விற்பனை செய்ய முடியும். மேலும் அவர்களுடைய வாழ்வாதாரம் வளமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து வேளாண் மாணவர்கள் கலந்துரையாடல்

நாமக்கல், ஜன.28

நாமக்கல் மாவட்டம், பி.ஜி.பி வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள், எலச்சிப்பாளையம் விவசாய சங்கத் தலைவர் லேகநாதனை சந்தித்து கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில், விவசாயிகள் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சனைகள், விவசாயத்தில் நிலவும் சவால்கள் மற்றும் அதற்கான தீர்வு வழிமுறைகள் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக, விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் விவசாய வளர்ச்சிக்கு தேவையான ஆதரவு குறித்து விளக்கினார்.

மேலும், இளைய தலைமுறையினரும், வேளாண் கல்லூரி மாணவர்களும் எதிர்காலத்தில் நல்ல உத்தியோகங்களில் அமர்ந்த பின்னர், விவசாயிகளின் நலனுக்காக அரசு திட்டங்கள் மற்றும் பல்வேறு உதவித் திட்டங்களை ஒருங்கிணைத்து, அவற்றை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வேளாண் கல்லூரி மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு, விவசாயம் தொடர்பான தங்களது கருத்து களை பகிர்ந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# பங்கேற்பு ஊரக மதிப்பீடு குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் வேளாண் கல்லூரி மாணவர்கள்



சிவகங்கை, ஜன.28

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி அருகே உள்ள அணைக்கரைப்பட்டி கிராமத்தில் மதர் தெரசா கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்காக பங்கேற்பு ஊரக மதிப்பீடு (Participatory Rural Appraisal - PRA) தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தினர். இந்த நிகழ்ச்சியின் மூலம், அணைக்கரைப்பட்டி கிராமத்தின் நில அமைப்பு, விவசாய நிலங்கள், நீர்வளங்கள், மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை மாணவர்கள் சேகரித்து, அதனை வரைபடமாக தயாரித்து விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்தனர். இதன் மூலம் கிராம வளர்ச்சி குறித்த புரிதல் விவசாயிகளிடையே அதிகரித்தது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மதர் தெரசா கல்லூரி மாணவர்களான பா.காளீஸ்ரீ, கே.கஜேந்திரன், பா.நிறைப்பாண்டி, ரா.மதன்குமார், ரா.நவீன் குமார், பி.பிரதீஷ் ஆகியோர் கலந்து கொண்டு முக்கிய பங்காற்றினர்.

மேலும், விவசாயிகள் சந்தித்து வரும் பிரச்சனைகள் குறித்து நேரடியாக கேட்டறிந்து, அதற்கான தீர்வுகள் குறித்த கலந்துரையாடல்கள் நடைபெற்றன. விவசாய உற்பத்தி, நீர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு, வாழ்வாதார மேம்பாடு போன்ற பல்வேறு வியங்களில் மாணவர்கள் விவசாயிகளுடன் கலந்துரையாடி ஆலோசனைகள் வழங்கினர். இந்த பங்கேற்பு ஊரக மதிப்பீடு விழிப்புணர்வு நிகழ்ச்சி, விவசாயிகளின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு பெரும் உதவியாக அமைந்ததுடன், கிராம வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதையும் வெளிப்படுத்தியது. விவசாயிகள் இந்த நிகழ்ச்சியை வரவேற்று, மதர் தெரசா கல்லூரி மாணவர்களுக்கு தங்களது நன்றியையும் தெரிவித்தனர்.

# உயர் சமவெளிப் பகுதிகளில் உருவெடுத்து வரும் புதிய மக்காச்சோள நோய் : புல நோயறிதலிலிருந்து ஒருங்கிணைந்த மேலாண்மை வரை

சுருக்கம் (Abstract)

உயர் சமவெளிப் பகுதிகளில் மக்காச்சோள (Zea mays L.) சாகுபடி, சமீப காலங்களில் புதிய மற்றும் அறியப்படாத தாவர நோய்களால் பாதிக்கப்படுகின்றது. வழக்கமாக அறியப்பட்ட பூஞ்சை, பாக்டீரியா அல்லது வைரஸ் நோய்களின் அறிகுறிகளுடன் முழுமையாகப் பொருந்தாத ஒரு புதிய நோய் நிலை பல வயல்களில் கவனிக்கப்பட்டுள்ளது. இந்நோய், தனித்துவமான அறிகுறிகள், தழும்புத் தழும்பான பரவல் மற்றும் மகசூல் இழப்பை ஏற்படுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது. இந்தக் கட்டுரை, புதிய மக்காச்சோள நோயின் அறிகுறிகள், நோய் சுழற்சி, நோயியல் காரணிகள், நோயறிதல் நடைமுறைகள் மற்றும் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை உத்திகளை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி அடிப்படையில் விரிவாக விளக்குகிறது.

## 1. அறிமுகம் (Introduction)

மக்காச்சோளம் உலகளவில் உணவு, தீவனம் மற்றும் தொழில் துறை பயன்பாட்டிற்கான முக்கிய தானியப் பயிராக விளங்குகிறது. உயர் சமவெளிப்பகுதிகளில், இது வறட்சியைத் தாங்கும் தன்மை மற்றும் அதிக மகசூல் திறன் காரணமாக பரவலாக சாகுபடி செய்யப் படுகிறது. இருப்பினும், காலநிலை மாற்றம், தொடர்ச்சியான ஒரே பயிர் சாகுபடி, குறைந்த உழவு முறைகள் மற்றும் மண் ஆரோக் கியக் குறைவு போன்ற காரணிகள் புதிய நோய் நிலைகள் உருவெடுக்க வழிவகுக்கின்றன. இத்தகைய சூழலில் சமீபமாகக் கண்டறியப்பட்ட இந்த புதிய நோய், தாவர நோயியலில் ஒரு முக்கிய கவலையாக மாறியுள்ளது.

## 2. நோயின் அறிகுறிகள் (Symptoms)



இந்த புதிய மக்காச்சோள நோயின் அறிகுறிகள் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப மாறுபடுகின்றன மற்றும் ஆரம்ப நிலையில் கவனிக்கப்படாமல் போகும் அபாயம் உள்ளது.

**2.1 இலை அறிகுறிகள்**

- கீழ் இலைகளில் ஒழுங்கற்ற மஞ்சள்நிற தழும்புகள்
- இலை விளிம்புகளில் உலர்ச்சி ஆரம்பித்துப் பின்னர் முழு இலை உலர்தல்
- மஞ்சள் மயக்கம் பழுப்புநிற நெக்ரோசிஸாக மாறுதல்

**2.2 செடிமட்ட அறிகுறிகள்**

- போதுமான ஈரப்பதம் இருந்த போதும் முன்கூட்டிய வாடல்
- செடி உயரம் மற்றும் வளர்ச்சி குறைதல்
- ஒளிச்சேர்க்கை செயல்திறன் குறைவு

**2.3 கதிர் மற்றும் தானிய நிலை**

- கதிர் வளர்ச்சி முழுமையடையாமை
- தானிய நிரப்பல் குறைவு
- மொத்த மகசூல் கணிசமாகக் குறைதல்

**3. நோய் வளர்ச்சி மற்றும் புல பரவல் (Disease Development and Field Distribution)**



இந்த நோய் பெரும்பாலும் வயலில் தழும்புத் தழும்பாக (patchy distribution) காணப்படுகிறது. ஆரம்பத்தில் சில செடிகளில் மட்டும் தோன்றி, காலப்போக்கில் அருகிலுள்ள செடிகளுக்கு மெதுவாகப் பரவுகிறது. இதுநோய் உண்டாக்கியின் பரவல் திறன் மற்றும் சூழலியல் காரணிகளுடன் நேரடியாக தொடர்புடையதாகும்.

**4. நோய் சுழற்சி (Disease Cycle)**

இந்த புதிய நோய்க்கான நோய்சுழற்சி, புலக் கண்காணிப்பு மற்றும் ஆரம்ப ஆய்வுகளின் அடிப்படையில் பின்வருமாறு முன் மொழியப்படுகிறது:

**1. உயிர் வாழ்தல் (Survival)**

நோய் உண்டாக்கி மண் மற்றும் மக்காச்சோள பயிர் அவசியங்களில் உயிர் வாழ்கிறது.

**2. முதன்மை தொற்று (Primary Inoculum)**

சாதகமான வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தில் நோய் உண்டாக்கி செயல்பட்டு முதன்மை தொற்று உருவாகிறது.

**3. நோய் நுழைவு (Infection)**

இலைகளின் இயற்கை திறப்புகள் அல்லது பலவீனமான திசுக்கள் வழியாக நோய் செடிக்குள் நுழைகிறது.

### 4. உட்புகுதல் மற்றும் நோய் வளர்ச்சி (Colonization)


நோய் உண்டாக்கி இலை உடலியல் செயல்பாடுகளை பாதித்து மஞ்சள் மயக்கம் மற்றும் உலர்ச்சியை ஏற்படுத்துகிறது.

### 5. இரண்டாம் நிலை பரவல் (Secondary Spread)

பாதிக்கப்பட்ட செடிகளில் இருந்து அருகிலுள்ள செடிகளுக்கு நோய் பரவுகிறது.

### 6. தொடர்ச்சி (Carryover)

அறுவடை பின்னர் பயிர் அவசியங்கள் மூலம் அடுத்த பருவத்திற்கு நோய் தொடர்கிறது.



### 5. நோயறிதல் நடைமுறைகள் (Diagnostic Approaches)

- புலத்தில் அறிகுறிகளின் முறைப்படியான ஆய்வு
- வழக்கமான ஊட்டச்சத்து குறைபாடுகள் மற்றும் வறட்சி அழுத்தத்திலிருந்து வேறுபடுத்துதல்
- ஆய்வக நிலையில் பூஞ்சை, பாக்டீரியா மற்றும் வைரஸ் நோய்களை செய்தல்
- நோய் ஒரு புதிய நோய் உண்டாக்கி அல்லது நோய் தொகுப்பாக இருக்கலாம் எனக்கருதப்படுகிறது

### 6. நோயியல் காரணிகள் (Epidemiological Factors)

**அட்டவணை 1. நோய் உருவெடுக்க காரணங்கள்**

| காரணி | நோய் வளர்ச்சியில் பங்கு |
|---|---|
| காலநிலை மாறுபாடு | நோய் செயல்பாட்டை ஊக்குவிக்கும் |
| தொடர்ச்சியான பயிரிடல் | நோய் மூலங்கள் அதிகரிப்பு |
| குறைந்த உழவு | நோய் உயிர் வாழ்தல் |
| மண் ஆரோக்கியக் குறைவு | எதிர்ப்பு குறைதல் |
| செடி அழுத்தம் | நோய் தாக்கம் அதிகரிப்பு |

**7. ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை (Integrated Disease Management)**

- நோயற்ற மற்றும் சான்றளிக்கப்பட்ட விதை பயன்பாடு
- பயிர் சுழற்சி நடைமுறை
- பயிர் அவசியங்களை சரியான முறையில் மேலாண்மை செய்தல்
- உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்களின் பயன்பாடு
- அவசியமான சூழலில் பரிந்துரைக்கப்பட்ட இரசாயன மருந்துகள்

**8. மக்காச்சோள உற்பத்தியில் தாக்கம்**

**அட்டவணை 2. பயிர் செயல்திறனில் நோயின் தாக்கம்**

| அளவு கோல் | ஆரோக்கிய செடி | நோயுற்ற செடி |
|---|---|---|
| இலை ஆயுள் | சாதாரணம் | முன்கூட்டி யவாடல் |
| கதிர் அளவு | சிறந்தது | குறைந்தது |
| தானிய நிரப்பு | முழுமையானது | குறைபாடு |
| மகசூல் திறன் | அதிகம் | நடுத்தர குறைவு |

**அட்டவணை 3. ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள்**

| மேலாண்மை உத்தி | எதிர்பார்க்கப்படும் பயன் |
|---|---|
| பயிர் மாற்றம் | நோய் சுழற்சி முறிவு |
| எதிர்ப்பு கொண்ட இனங்கள் | நோய் தீவிரம் குறைவு |
| மண் கரிமப் பொருள் | நுண்ணுயிர் கட்டுப்பாடு |
| தொடர்ச்சியான கண்காணிப்பு | ஆரம்ப கட்ட கட்டுப்பாடு |

**9. முடிவுரை (Conclusion)**

உயர் சமவெளிப் பகுதிகளில் உருவெடுத்து வரும் இந்த புதிய மக்காச்சோள நோய், மாற்றம் அடையும் வேளாண் சூழலில் தாவர நோயியல் மேலாண்மையின் சவால்களை வெளிப்படுத்துகிறது. முறையான நோயறிதல் மற்றும் ஒருங்கிணைந்த மேலாண்மை நடைமுறைகள் மூலம் மகசூல் இழப்புகளை குறைக்க முடியும். நோய் கண்காணிப்பு மற்றும் பன்முக ஆராய்ச்சி முயற்சிகள் மக்காச்சோள உற்பத்தியை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**மேற்கோள்கள் (Indicative)**


- Agrios, G.N. Plant Pathology
- Madden, L.V. et al. Plant Disease Epidemiology
- உருவெடுத்து வரும் தாவர நோய்கள் குறித்த சமீபத்திய ஆய்வுகள்

மேலும் விவரங்களுக்கு, ச.வினோத், இளங்கலை வேளாண் மாணவன், முனைவர் பா.குணா, இணைப்பேராசிரியர், துறைத் தலைவர் மற்றும் குழு மேற்பார்வையாளர், வேளாண் விரிவாக்கத்துறை, பா.நந்தகுமார், முதுநிலை உதவிப்பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், ம.சுரேஷ், உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், நாளந்த வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி -621 104. மின்னஞ்சல் : vinothsakthi371@gmail.com, தொலைபேசி எண் : 95853 39593 தொடர்பு கொள்ளலாம்.

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



திண்டுக்கல், ஜன.28

திண்டுக்கல் மாவட்டம், குளத்துப்பட்டி கிராமத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இப்கோ கள அதிகாரி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பல்வேறு பயிர்களில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, நானோ ஜின்க், நானோ காப்பர், சாகரிகா மற்றும் இதர உரங்களின் பயன்பாடு குறித்து விளக்கினார். நானோ உரங்களைப் பயன் படுத்துவதன் மூலம் உற்பத்தி செலவு குறைந்து, மண்வளம் பாதுகாக்கப்படும் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார்.

மேலும், இரசாயன உரங்களின் அதிகப் பயன்பாடு மண் மாசுபாடு மற்றும் மண்வள குறைவை ஏற்படுத்தும் என்றும், அதற்கான சிறந்த மாற்றாக நானோ உரங்களை பயன் படுத்தலாம் என்றும் வலியுறுத்தினார். துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிக்க இப்கோ கிசான் ட்ரோன் சேவையை பயன்படுத்தலாம் என்றார். நானோ உரங்களுடன் வேளாண் பூச்சிக் கொல்லி மருந்துகளையும் கலந்து தெளிப்பதன் மூலம் இடுபொருள் செலவுகளை குறைக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். பின்னர், இப்கோவின் சங்கட ஹரன் பீமா யோஜனா திட்டத்தை அறிமுகப்படுத்தி பேசினார். இத்திட்டத்தின் கீழ் நானோ உரங்கள் வாங்கும் விவசாயிகள் ரூ.2 லட்சம் வரை இலவச விபத்து காப்பீடு பெறலாம் என்றார்.

# வசந்தம் அக்ரிடெக்

VASANTHAM Agri Tech

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்



Sarathi i06

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# மிளகாய் பயிரில் மகசூல் மற்றும் தரத்தை மேம்படுத்தும் முறை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவி



தேனி, ஜன.28

தேனி மாவட்டம், போடி, சிலமலை கிராமம், மிளகாய் பயிரில் மகசூல் மற்றும் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன், இலைபேன் (Thrips) கட்டுப்பாட்டிற்கான நீல நிற ஒட்டு பொறி பயன்பாடு குறித்து விளக்கக் காட்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி Madurai Agricultural College andResearch Institute-ஐ சேர்ந்த வேளாண்மை மாணவி கிரிஜாவால், RAWE திட்டத்தின் கீழ் 18/01/26 அன்று நடத்தப்பட்டு, 7 விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மிளகாய் பயிரில் இலை சுருக்கம், மலர்ச்சி குறைவு மற்றும் விளைச்சல் இழப்பை ஏற்படுத்தும் இலைபேன் தாக்கத்தை குறைக்க, குறைந்த செலவில் பயனளிக்கும் முறையாக நீல நிற ஒட்டு பொறி பயன்பாடு விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. ஒரு ஏக்கருக்கு 25-30 பொறிகள் பயிர் மேல்பகுதி உயரத்தில் சம இடைவெளியில் நிறுவ வேண்டும் என்றும், பொறிகள் பூச்சிகளால் நிரம்பியதும் மாற்றி, தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இந்த முறையால் ரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாடு குறைவு, இயற்கை எதிரிகள் பாதுகாப்பு மற்றும் மகசூல், தரம் மேம்பாடு ஆகிய பலன்கள் ஏற்படும் என விளக்கப்பட்டது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741